அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IV.] JUNE, 1904-௵ ஜூன். [இலக்கம் 2.

வாயில்லா ஜந்துக்களை விசேஷமாக நேசித்துவந்த பிரான்ஸிஸ் பவர் காப் பெருமாட்டி மரணம்.

பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டி சென்ற எப்பிரல்௴-ல் மரணமடைந்த செய்தி யாவருக்கும் அதிகமான விசனத்தை யுண்டாக்குகின்றது. இறக்கும்போது இப்பெருமாட்டிக்கு வயது எண்பத்திரண்டு. இவர் சுயநயத்தைச் சிறிதும் பாராட்டாமல் பரோபகாரத்திற்காகவே பாடுபட்ட பெருமாட்டியாதலால், அப்படிப்பட்டவருடைய நல்லுதவியை இழந்துபோனது இந்நாட்டுக்குப் பெரிய துர்ப்பாக்கியமே. இவர் பெண்பாலாருடைய கல்வித்தேர்ச்சி முதலானவைகளைப்பற்றியும் அவர்களுக்குப் பட்டப்பெயர் அளிப்பதைப்பற்றியும் முக்கியமாகப் பாடுபட்ட மகோபகாரி. இவர் நமது விக்டோரியா மகாராணியார் போலவே எண்பத்திரண்டு வருஷமளவும் உயிரோடு வாழ்ந்திருந்து, தமது தள்ளாமையையும் பாராமல் உலகத்தின் நன்மையையே முதன்மையாக நாடியவர். இவருடைய குணாதிசயங்களைப்பற்றிப் பல பிரபுக்களும் பெருமாட்டிகளும் இவரது எண்பதாவது வயது பிறந்தநாளில், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய விடங்களில் பெருமையாகப் பேசிக் கொண்டாடியதைப் பலர் பத்திரிகைகளில் படித்துப் பார்த்திருக்கலாம்.

இவர் முக்கியமாக, வாயில்லா ஜந்துக்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இப்படிபபட்டதென்பதையும், பசு பக்ஷி மிருகாதிகள் விஷயத்தில் மனிதர் செய்யவேண்டிய கடமை யித்தன்மையதென்பதையும், அதுவிஷயத்தில் மனிதர்கள் செய்துவருகிற அக்கிரமங்கள் இப்படிப்பட்டவையென்பதையும், வாயில்லா ஜந்துக்களுக்குள்ள சுதந்தரங்களும் நியாயங்களு மிவையென்பதையும் நன்று யெடுத்துக்காட்டி, மானிடர்களுடைய மனத்தில் ஜீவகாருணியம் உண்டாவதற்கு வேண்டிய வழிகளைச் செவ்வையாக விளங்கச்செய்தார். இவர் சாதாரணமான லோகோபகாரி யென்பது மாத்திரமேயன்று; சிறந்த கல்வித்தேர்ச்சியுடையவராய் அதற்கு வேண்டிய பல சஞ்சிகைகளு மெழுதிப் பிரசுரஞ்செய்தார். இவர் அன்பும் அருளும் உதார குணமும் நிறைந்த மனமும், மேலான ஸாமர்த்தியங்களு முடையவராகி, உலகத்திற்கு நன்மை செய்வதிலேயே தமது வாழ்நாளைக் கழிக்கலாயினார். இந்த இந்து தேசத்தினிடத்திலே இவருக்கு அபிமானம் மிகவும் அதிகம்.

இங்கிலாந்திலே சிறப்புற்று விளங்கிய தேசோபகாரிகளான பிளாரென்ஸ் நைதிங்கேல், மேரி கார்ப்பெண்ட்டர் முதலான பெருமாட்டிகளுடைய கோட்டியில் இவரும் சேரத்தக்கவராம் இவர் சாதாரணமா யெப்பொழுதும் முகமலர்ச்சியும் ஸரஸமான வார்த்தையும் உள்ள புத்திசாலி; சொற்சுவை பொருட்சுவையுடன் சபைகளில் பிரசங்கம் செய்ய வல்லவர். இவர் எப்பொழுது எந்த விடத்தில் உட்கார்ந்திருந்தாலும் ஸர்வகாலமும் இவருடைய ஸரஸமான ஸம்பாஷணையைக் கேட்க இவரைச் சுற்றிலும் பலர் வந்து கூடியிருப்பார்கள். இப்படிப்பட்ட மேலான குணங்களும் சிறந்த

ஸாமர்த்தியங்களுமுள்ள உத்தமமான மனிதர்கள் அனைவருடைய மனத்திலும் மறக்கப்படாமல் நெடு நாள்வரையிலும் குடிகொண்டிருப்பாரென்பது நிச்சயம்

இப்பெருமாட்டி முன்னமே யெதிர்பார்த்துக் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தபடியே சென்ற ஏப்ரல்மீ 5வ செவ்வாய்க்கிழமை திடீரென்று தேகவியோகமானார். இளமைப்பருவம் முதல் வழக்கப்பட்டிருந்தபடியே அன்றையதினமும் காப் பெருமாட்டி அதிகாலையி லெழுந்து படுக்கையறையின் சாளரங்களைத் திறந்தார். பிறகு இவர் அந்த அறையில் உலாவிக்கொண்டே யிருக்கையில் திடீரென்று ஸ்வாமியினது கட்டளையின்படி ஒருவிதமான சிரமமுமில்லாமலே அநாயாஸ மரணமடைந்தார். இவர் மரணமடைவதற்கு முதனாள் இராத்திரிவரையிலும் தாம் செய்யும் லோகோபகாரமான காரியங்களை விடாமல் செய்துகொண்டேயிருந்தார். அன்றிராத்திரி இவருடைய வேலைக்காரி வழக்கப்படியே படுக்கையண்டை வந்து இவரது அன்பான நாயை அப்புறம் எடுத்துக்கொண்டு போனபோது, காப் துரைசானி தமது நாயைப்பார்த்து, உலகத்தி லொவ்வொருவரும் எளியவாயில்லாத ஜந்துக்களைத் தங்கள் குழந்தைகள்போலவே பாவித்து, அங்கசேதம் செய்து சாஸ்திர பரீக்ஷை செய்வது முதலான கொடிய செய்கைகள் மஹாபாதகமென்று தெரிந்துகொண்டு அதை விலக்கும்படியான காலம் கூடிய சீக்கிரமே வருமென்று சொல்லிக் கொண்டாடினர்.

இவர் தாம் இறப்பதற்கு முன்னமே தமது சரீரத்தை இன்னவிடத்தில் இன்னவிதமாக அடக்கம் செய்யவேண்டுமென்று மரணசாஸன மெழுதி வைத்திருந்தார். அதில் கண்டவிதமாகவே அதிகமான ஆடம்பரங்க ளொன்றுமில்லாமல் அவருடைய சரீரம் அவருடைய குதிரைகளே பூட்டிய சொந்தமான வண்டியில் ஏற்றிச் சொந்தமான வண்டிக்காரனாலேயே ஓட்டப்பட்டு இடுகாட்டுக்குக் கொண்டுபோகப்பட்டது. அவருடைய மரணசாஸனத்தில் குறித்தபடியே பந்துமித்திரர் முதலிய யாவரும் துக்கக்கோலங்கொள்ளாமல் சந்தோஷமான வேஷத்துடனே ஸமாதிபூமிக்கு அவரது வண்டியைப் பின்தொடர்ந்து போனார்கள். அவர் தமது ஸகியான ஒரு பெருமாட்டியின் ஸமாதிக்குப் பக்கத்தில் தாமே ஏற்படுத்திப் பலதரம் பார்த்துத் தீர்மானித்திருந்த இடத்திலே அவருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டது.

விக்ட்டோரியா மகாராணியின் அரசாட்சி காலத்தில் லோகோபகாரமாகப் பாடுபட்ட ஸ்திரீகளுடைய வரிசையில் இந்தக் காப் பெருமாட்டிமிகவும் சிறந்தவராக விளங்குகிறார். 1822-ஞு டிசெம்பர்மீ 4வ பிறந்து, 1904–ஞு ஏப்ரல்மீ 5வ தேகவியோகமான இந்தப் பெண்மணி மிகவும் நெடியதான தமது வாழ்நாள் முழுமையும் ஜனங்களுடைய நன்மைக்காகவே உபயோகப்படுத்தினர். இவர் வெகுவாய் ஜீவஜந்துக்களை அங்கசேதம் செய்து பரீக்ஷைசெய்து பார்க்கலாகாதென்பதற்காகவே பாடுபட்டவரானாலும், உலகத்திற்கு உபகாரமான மற்றும் பல துறைகளிலு மிழிந்து பாடுபட்டிருக்கிறார். தம்முடைய புத்தியில் தோன்றிய உண்மைகளையும் நியாயங்களையும் உலகத்தாருக்கு வெளியிடவும், அக்கிரமமென்றாவது கொடுமையென்றாவது பொய்யென்றாவது தம் புத்திக்குத் தோன்றியவைகளை யாவரும் கைவிடும்படி கண்டித்து உலகத்தாரை நல்வழிப்படுத்தவுமே தாம் பாடுபட்டதாக அவரே சொல்லுகிறார். 'நான் ஆண்பிள்ளையாகப் பிறந்து, எனது சகோதரனைப் போலவே பார்லிமெண்டு சபையிலாயினும், வேறு பெரிய தொரு அதிகாரத்திலாயினும் பிரவேசிக்கும்படியான பாக்கியம் பெற்றிருந்தேனாயின், உலகத்தவர்களுக்கு உபயோகமாகிய அஸாத்தியமான காரியங்கள் எவ்வளவோ செய்துவிட்டிருப்பேன். ஆயினும் என்னைப் பெண்ணாகப் பிறப்பித்த பரமதயாளுவினிடம் நான் பழிகூறத் துணிகிறேனில்லை. ஏதோ ஒரு நன்மையைக் கருதியே அவர் இப்படி யென்னைப் பெண்ணாகப் பிறப்பித்தார். பெண்ணாகப் பிறப்பித்ததனாலேதான் என்னுடைய இனமான ஸ்திரீகளுக்காகவும், ஸ்திரீகளிலும் துர்ப்பலமான எளிய வாயில்லா ஜந்துக்களுக்காகவுமே நான் விசேஷமாகப் பாடுபடும்படியாயிற்று. விசேஷமான ஸாமர்த்தியமுள்ள மஹா புருஷர்களுடைய மனத்தில் இப்படிப்பட்ட ஆதரவில்லாத அற்ப ஜந்துக்களிடத்தில் அநுதாபம் ஒருபோதும் தோன்றாதல்லவா?' என்று ஒருதருணத்தில் இவரே தம்முடைய திறமையை வெளியிடுகிறார்.

இவர் இளமையிலே எல்லாக் கலைகளையும் கற்றுத் தேர்ச்சிபெற்று மிகுந்த தெய்வபக்தியும் பரோபகார சிந்தையு முடையவரானார். 1855–ம் வருஷத்திலேயே ஜனங்களுக்கு நீதிபோதகமான நானா விஷயங்களையும் பற்றிப் பல ஸஞ்சிகைகள் எழுதலானார். பிறகு, 1857–ம் வருஷம் தந்தை யிறந்துபோக, நானாதேச யாத்திரைசெய்து தாமே அநேக விஷயங்களைத் தமது நுட்ப புத்தியினால் பார்த்துத் தெரிந்துகொண்டார். சுதேசம் திரும்பி வந்தவுடனே, மிஸ். கார்ப்பெண்ட்டர் பெருமாட்டியுடனே சேர்ந்துகொண்டு, அவருடன் ஒரேயிடத்தில் வஸித்து, அவர் செய்யும் லோகோபகாரமான காரியங்களில் தாமும் உதவியாயிருந்தார். மிஸ். கார்ப்பெண்ட்டர் அப்பொழுது தாம் குற்றவாளிகளான சிறு பெண்களுடைய சீர்திருத்தலுக்கு வழிதேடிக்கொண்டிருந்தவர். பிறகு தொழிற்சாலைகளைச் சீர்ப்படுத்தும் விஷயத்திலும், நோயாளிகளுக்குத் தக்கபடி சிகிச்சோபசாரஞ் செய்து போஷிக்கும் விஷயத்திலும் பாடுபடலானார்கள்.

அப்பால் காப் பெருமாட்டி பற்பல புஸ்தகங்களும் நீதி நியாயங்களை வெளியிடுகின்ற நானாவித

மான மாதாந்தச் சஞ்சிகைகளு மெழுதலாயினர். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்குப்போலவே, கல்விப் பயிற்சி செய்வித்துக் கல்விப் பட்டப்பெயர்கள் தர வேண்டுமென்று அதைப்பற்றி யொரு பத்திரிகை யெழுதி 1862–ஷூ மஹாஜன ஸபையொன்றில் படித்தார். அக்காலத்தில் அதைக்கேட்டு யூனிவர் ஸிட்டியென்னும் சகலகலாசாலையைச் சேர்ந்தவர்க ளெல்லாம் அவளை ஏளனம் செய்யும்படியாயிற்று. அப்பால் பதினேழு வருஷங்களுக்குப் பிறகு அவ ருடைய காரியம் சித்திபெற்று யாவரும் கொண்டா டும்படியாயிற்று. இதுவன்றியும், பர்த்தாக்கள் பாரியைகளைக் கொடுமையாக நடத்தலாகாதென் பதைப்பற்றியும் அதிகமாகப் பிரயாசைப்பட்டு அந்தக் காரியத்தையும் முடித்தார்.

சாஸ்திர பரிசோதனை செய்வதற்காக வாயில்லா ஜந்துக்களைச் சேதிக்கக் கூடாதென்று அதற்காக 1863–ஷூ இவர் பாடுபடத் தொடங்கினர். அங்க சாஸ்திர பரிசோதனைக்காக ஒரு குதிரையைச் சேதித்துக் கொடுமைசெய்த விருத்தாந்தத்தைக் கேட்டவுடனே, இவருக்கு அதுவிஷயத்தில் அத் தனை ஆக்கிரக முண்டாகிவிட்டது. ஜீவஜந்துக்க ளிடமுள்ள அபிமானத்தினல் அவர் செய்த அஸாத்தியமான காரியங்களை யெல்லா மெடுத்து எழுத இங்கே இடமில்லை. அவர் தமது சக் திக்கு அதிகமாகவும் சிரமப்பட்டு இதற்காக அங் கங்கே அநேகம் ஸபைகளும் ஏற்படுத்தி, ஜீவஜந் துக்களைச் சேதிப்பதைக் கூடாதென்று தடுக்க முயன்றார். தள்ளாதவயதில் அதிகமாக சிரமப் படாமல் கொஞ்சகாலம் சுகமாயிருக்கும்படி அவ ருடைய மித்திரர்கள் பலர் வேண்டிக்கொண்டும், காப் பெருமாட்டி மேற்கொண்ட முயற்சியைக் கைவிடாமல் 1898–ம் ஆண்டுவரையில் பற்பல விடங்களில் பிரஸங்கம் முதலானவைகள் செய்து, அந்தக் கொடிய வழக்கத்தை அடியோடு வேர றுக்கும் வழியைத் தேடிவந்தார்.

இவ்வுலகத்திலே ஜனித்த மேன்மைபெற்ற பெருமாட்டிகளில், மிஸ். காப் என்பவர் ஒருவர். இவர் இவ்வுலகத்தைவிட்டு மேலுலகம் சென்றத னல், தருமகுணத்தின் பிரகாசம் இங்கே கொஞ்சம் மலினமடைந்ததென்றே சொல்லலாம். ஏனெ னில், அவரைப்போன்றவர் அவருக்குப் பின் ஒரு வரையுங் காணோம். உலகத்தில் பிரசித்திபெற்ற உத்தமஸ்திரீகள் அநேகர் இருக்கிறார்களானாலும், காப்பெருமாட்டியைப்போல அவ்வளவு பரோப காரமே பெரிதாகக் கொண்டவரைக் காண்பதரிது. எவ்விடத்திலேனும் குற்ற மொன்றிருக்கக் கண் டால், காப்பெருமாட்டி அதைஒருபோதும் கண்டி யாமல் விடார்; குணமிருக்கக் கண்டால் அதைக் கொண்டாடாமலும் விடார். அவர் எதற்கும் அஞ் சாமலும் சுயநயத்தைச் சிறிதேனும் பாராட்டாம லும், ஸ்திரீகளுடைய பெருமைக்காகவும், வாயில்லா ஜந்துக்களுடைய உரிமையை ஸ்தாபிப்பதற்காக வுமே முக்கியமாகப் பாடுபட்டே தமது வாழ்நாளைக் கழித்தார். இவர் ஒரு ஸ்திரீயாக இருந்ததனாலும், இவர் பட்ட கஷ்டமெல்லாம் தம்மைப்போன்ற பெண்பாலார்களுக்கும், எளிய வாயில்லா ஜந்துக் களுக்குமே யாதலாலும், சிலர் இவருடைய பிரயா ஸத்தை அத்தனை விசேஷமாகக் கொண்டாடா விடினும், கருணைக்கடலான கடவுள் கண்ணுக்கு அவை ஒருபோதும் அற்பமாகத் தோன்ற. ஈச்வர சிருஷ்டியில் ஜீவவர்க்கங்களெல்லாம் ஒரு தன்மையானவையே யன்றோ? அப்படியிருக்க, ஸ்திரீகளென்றும், வாயில்லாத அற்ப ஜந்துக்க ளென்றும், சிலவற்றை நாம் தாழ்வாக நினைக்க லாகுமோ? அப்படி உதவியற்று ஈனஸ்திதியிலி ருப்பவர்களுக்கு வேண்டிய ஸகாயஞ்செய்து அவர் களையும் மேலான பதவிக்குக் கொண்டுவரும்படி பாடுபடுவதன்றோ பெருந்தன்மையும் தருமகுண முமாகும். ஆதலால், இந்த காப் பெருமாட்டி, இப்பொழுது இந்த ஊனுடம்பை யொழித்தனளா யினும், என்றைக்கும் அழியாத புகழுடம்பு பெற் றுத் தெய்வத்தன்மை யுடையவளாய், எலிஜபெத் ப்ரை, பிளாரென்ஸ் நைதிங்கேல் முதலான உத் தம ஸ்திரீகளோடொப்பாக வாழ்கின்றனளென்று அறிந்து, பெண்பாலார் அனைவரும் அவர் முன் நட ந்து காட்டியலோகோபகாரமான சன்மார்க்கத்தைக் கைப்பற்றி நடந்து பெருமைபெற்று வாழக்கடவ ரென்று வேண்டுகிறோம்.

ஜந்துக்களுக்கு நாமகரணஞ் செய்தது யார்?

மனிதர் அநேகர் பலமுறை நாடு நகரங்களி லும் காடுகளிலும் தோட்டங்களிலும் ஆறு ஏரிகளி லும் நாநாவிதமான ஜந்துக்களைப் பார்க்கிறார்கள்; அச்சிட்டிருக்கும் அநேகம் புஸ்தகங்களிலும் பிரா ணிகளின் சித்திரப்படங்களைக் கண்டு களிக்கிறார் கள். ஆனாலும், இந்தப் பிராணிகளுக்கு இப்படிப் பெயரிட்டது யார்? அப்படிப் பெயர் வந்ததற்குக் காரண மென்ன? என்று இதுவரையில் யாராவது விசாரித்தவர் உண்டா? யோசித்தால், அப்படி விசாரித்தவர் மிகவும் அருமையென்றே தோன்று கின்றது. வாயில்லாத எளிய ஜந்துக்கள் ஒவ்வொன் றுக்கும் தனித்தனி வெவ்வேறுவிதமான பெயர் வந்ததற்குக் காரண மின்னதென்பதைத் தெரிந்து கொள்வது, அந்தப் பிராணிகளிடத்தில் அபிமான முடையவர்களுக்கு மிகவும் பிரியமாயிருக்குமாகை யால், அதைச் சுருக்கமாய் இவ்விடத்தில் சிறிது சொல்லுவோம்.

நமது தமிழ்ப் பாஷையிலும், இதற்குத் தாய் பாஷையான ஸம்ஸ்கிருதத்திலும் பற்பல மிருகங்க ளுக்கு வழங்கும் பெயர்களைப்பற்றி முதலில்

விசாரிப்போம். இத்தேசத்திலே ஸகலமான ஜனங்களும் பேசுகிற பாஷையான தமிழில் எல்லாப் பிராணிகளுக்கும், படித்தவர் படியாதவர் ஆகிய பலருக்கும் சுலபமாய்ப் பொருள் விளங்கும்படி பேசுவதற்குச் சாதாரணமான பெயர் ஒன்று இருந்தாலும், செய்யுள்களில் வழங்கும்படியான பல பெயர்கள் நிகண்டு முதலானவைகளில் விசேஷமாகக் காணப்படுகின்றன. இப்படியே வடமொழியிலும் ஒவ்வொரு பிராணிக்கும் பலபெயர்களுண்டு. அப்பெயர்களெல்லாம் இடுகுறியோ காரணமோவென்று விசாரித்தால், ஒவ்வொருபெயரும் இடுகுறி காரணப்பெயரென்றே நன்ருக விளங்கும். ஆதியில் ஒவ்வொரு மிருகத்திற்கும் பெயர்வைத்த மூலபுருஷன் முதலில் ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டே ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு பெயர் வைத்து, பிறகு அப்பெயரை அதற்கு இடுகுறியுமாக்கினுன் என்கிருர்கள்.

மிருகங்களுக்கெல்லாம் ராஜாவான சிங்கத்தின் பெயர் முதற்கொண்டு சில மிருகங்களின் பெயர்களைப்பற்றி முதலிலே சற்று விசாரிப்போம்.

1. **சிங்கம்** என்கிற பெயர் ஸிம்ஹ என்கிற வடசொல்லின் திரிபு. அந்த வடசொல்லுக்கு 'மற்ற மிருகங்களை இம்சிப்பது' என்பது பொருளாகையால், சிங்கம் என்கிற தமிழ்ப்பெயருக்கும் அதே அர்த்தமாம். இம்சிக்கிற மிருகங்கள் இன்னும் அநேகம் இருந்தாலும், சிங்கமென்கிற பெயர் இடுகுறியாய்ச் சிங்கத்தையே குறிக்கும். மற்றப்பெயர்களு மிப்படியே அறிந்துகொள்ளவேண்டும். இவ்விதமாகவே, மிருகங்களுக்கெல்லாம் அரசனென்னும் பொருளுள்ள **மிருகேந்திரன்**, பிடரிமயிருள்ளது என்னும் பொருளுள்ள **கேஸரி**, நகங்களையே ஆயுதமாக உடையதென்னும் பொருளுள்ள **நகாயுதம்**, பரந்த முகமுள்ளது என்னும் பொருளுள்ள **பஞ்சாநநம்**, கம்பீரமான கர்ஜ்ஜனையையுடையது என்னும் பொருளுள்ள **கண்டீரவம்** முதலான பல பெயர்கள் சிங்கத்திற்கு உண்டு.

2. **யானை** என்கிற பெயர் யா (=போகுதல்) என்கிற வடமொழிப் பகுதியடியாகப் பிறந்த பெயராகத் தோன்றுகிறது. வடமொழியில் **யானம்** என்பது வாஹனத்திற்குப் பெயராதலால், இக்காரணத்தினுலேயே மிகப்பெரியதான இம்மிருகத்திற்கு இந்தப் பெயர் வந்திருக்கலாம்; இப்படியே மலைபோன்றது அல்லது உயர்வு பெற்றது என்னும் பொருளுள்ள **ஓங்கல்**, தந்தத்தையுடையதென்னும் பொருளுள்ள **தந்தி**, மதங்கொள்ளுகிறதென்கிற அர்த்தமுள்ள **கஜம்**, கும்பஸ்தலத்தையுடையதென்கிற அர்த்தமுள்ள **தும்பி**, துதிக்கையையுடையதென்னும் பொருள்ள **கரி**, மலையில் பிறந்ததென்னும் பொருளுள்ள **நாகம்**, துவாரமுள்ள கையையுடையதென்கிற அர்த்தமுள்ள **புழைக்கை**, தொங்குகிற வாயையுடையதென்னும் பொருளுள்ள **நால்வாய்**, சத்துருசேனையைத் தடுப்பது என்கிற பொருள்கொண்ட **வாரணம்** முதலானபல பெயர்கள் யானைக்கு வழங்குகின்றன.

(இன்னும் வரும்.)

பிராணிகளுக்குத் தெரிந்த பாஷை.

(தொடர்ச்சி.)

ஆச்சரியமான மற்றொரு திருஷ்டாந்தம் கேளும். ஒரு பெரிய பூனையும் அதன் பெண்ணான ஒரு சிறு பூனையும் அடுத்த வீடுகளில் வஸித்துக்கொண்டிருந்தன. சிறிய பூனைக்குப் பல குட்டிகளுண்டு. ஒருநாள் அந்தச் சிறு பூனை எங்கேயோ வெளியே போய்ச் சண்டை போட்டு உடம்பெல்லாம் புண்ணுகி வந்தது. ஐயோ பாவம்! அதற்கு எழுந்து நடக்கவும் சக்தியில்லை. வீடு வந்தவுடனே அது செய்ததென்ன தெரியுமா? காயம் பட்ட பூனை தக்ஷணமே தன் தாயினிடம் போய் என்னவோ பேசிவிட்டு, உடனே தன் குட்டிகளையெல்லாம் அந்தப் பெரிய பூனையினிடம் கொண்டுவிட்டது. தன் பெண்ணுக்கு உடம்பு சொஸ்தமாகிறவரையில் அந்தக் குட்டிகளைப் பெரிய பூனையே காப்பாற்றி வந்ததாம். இதனுல், பூனைக்கும் பேசுகிற பஷை யுண்டென்று நன்ருய் விளங்குவதோடு, தாய்க்கு மக்களிடத்திலுள்ள அன்பின் பெருமை தெரியவருகிறதல்லவா? இப்படிப்பட்ட பிராணிகளையோ நாம் வாயில்லா ஜந்துவென்று சொல்வது? ஒருபோதும் சொல்லலாகாது; நாலுகாலுள்ள நல்ல செல்வமென்றும், பறக்கும் பிரியமான பிராணியென்றுமே பெயரிட்டுச் சொல்லவேண்டும்.

தம்முடைய விருப்பு வெறுப்புகளை தெரிவிக்க ஜந்துக்களுக்குச் சக்தியுண்டென்பதற்கு இச்சென்னையிலேயே ஒரு திருஷ்டாந்தம் காணலாம்.

அதாவது, திருவல்லிக்கேணிப் பெருமாள் கோவில் யானைக்குச் சுற்றிலும் நிளைச்சல் ஒன்று கட்டும்படி நேர்ந்தது. யாரோ ஒரு வழிப்போக்கன் பிடித்துக்கொண்டிருந்த புகைச்சுருட்டை மேற்படி நிளைச்சலுக்கருகில் எறிந்துவிட்டுப் போய்விட்டான். அதின் நெருப்பு அந்நிளைச்சலில் பற்றிக்கொள்ள, யானை புகையைக் கண்டு வீரிட்டுக் கூவியது. அந்தக் கடோரமான கூச்சலைக் கேட்டவர்கள், இதற்குச் சில வேளைகளில் மதம் பிடிக்கிறதுண்டு, அப்படியோவென்று கிட்டப்போக அஞ்சினுர்கள். அது மீட்டும் விடாமல் கதறவே, ஒருவன் தைரியமாக நிளைச்சலுள் எட்டிப்பார்த்தான். நெருப்புப் பற்றியிருக்கிற மூலையை நோக்கி யானை துதிக்கையை நீட்டி நீட்டிப் பெருமூச்சுவிட்டுப் புகை வராதபடி செய்துகொண்டிருந்தது. அதைக்கண்டு நெருப்புப் பற்றிக்கொண்டிருக்கிறதென்று தெரிந்துகொண்டு அவன் மற்றவர்களைக் கூவினுன். உடனே எல்லோரும் வந்துகூடி அருகிலுள்ள குளத்துநீரைக் குடங்களில் கொண்டு போய் நிளைச்சலில் பற்றிக்கொண்டிருந்த நெருப்பை அவித்தார்கள். உடனே யானை தனக்கு நேர்ந்த ஆபத்து நீங்கியதென்று கூச்சலிடாமல் சும்மாவிருந்தது.

ஜந்துக்களுக்கும் தங்கள் கருத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தும் சக்தியுண்டென்பது இதனுலும் தெளிவாக விளங்குகின்றதல்லவா?

ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்து வருடாந்த சபை.

அக்கிராஸனாதிபதியின் உபந்நியாஸம்.

ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தின் இருபத்து மூன்றாவது வருஷாந்த மஹா ஸபை கூடியகாலத்தில் அந்த ஸபைக்கு அக்கிராஸனாதிபதியாக வீற்றிருந்த இச்சென்னைக் கவர்னராகிய மஹா கனம் பொருந்திய லார்டு ஆம்தில் பிரபு அவர்கள் தமது அபிப்பிராயம் விளங்க ஒரு உபந்நியாஸம் செய்தார். அதின் விஷயத்தை இங்கே சுருக்கமாய் எழுதுகிறோம்.

"இதற்குமுன் இரண்டு வருஷங்களில் இந்தச் சங்கத்தின் வருஷாந்த மஹா ஸபைக்கு என்னை அக்கிராஸனாதிபதியாகும் பெருமையை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டபோது, அந்தத் தருணம் வேறு நிர்ப்பந்தமான காரியங்க ளிருந்ததனால் அந்தப் பெருமையை வகிக்கக் கூடாமற்போனதைப்பற்றி நான் விசன முற்றவனாயிருந்தேன். இந்த வருஷம் அப்படியில்லாமல் எனக்கு ஒழிவான ஸமயம் பார்த்து ஸபை கூடும்படி ஏற்பாடு செய்ததனால், இதற்கு அக்கிராஸனாதிபதியாகும் பெருமையைப் பெற்று இந்தச் சங்கத்தின் விஷயத்தி லெனக்குள்ள அபிமான மிப்படிப்பட்டதென்பதை ஒருவாறு வெளியிடுவதற்கு ஏற்ற சமயம் இப்பொழுது எனக்குக் கிடைத்ததைப் பற்றி மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். இப்பொழுது நான் இச்சபையின் காரியங்கள் நன்றாக நடந்தேறுவதைப் பார்த்துச் சந்தோஷப்படுவது தவிர, இங்கே எடுத்துச் சொல்லவேண்டிய விஷயமொன்று மதிகமில்லை. இப்பொழுது இந்தச் சங்கம் ஆரப்பித்து இருபத்திரண்டு வருஷம் பூர்ணமாகின்றது. இது இன்னும் நிலைப்படாமல் தத்தளிக்கிற சங்கமாயிராமல் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டு யாவராலும் பெருமையாகக் கொண்டாடப்பட்ட சிறந்த சங்கமாய் ஸ்தாபனம் பெற்றிருக்கிறதென்பது தெளிவாக விளங்குகின்றது. இந்தச் சங்கத்தின் அத்தியக்ஷர் தொகை விசேஷமாக விருத்தியடைந்திருக்கிறது; இதன் வரும்படியும், இதனால் செய்து முடிக்கவேண்டிய காரியங்களும் செவ்வையாகவே விருத்தியடைந்து வருகின்றன. மேலும், எந்தக் கொடுமையை அடக்குவதற்காக இச் சங்கம் ஸ்தாபிக்கவேண்டியது அவசியமாயிற்றோ, அந்தக் கொடுமை வரவரக் குறைய ஆரம்பித்திருக்கிறதென்று நம்பவும் போதுமான அத்தாட்சிகள் உண்டாயிருக்கின்றன. ஆனால், இந்தக் கொடுமைகள் அடியோடு வேரற்று அதனால் இந்தச் சங்கம் இருக்க வேண்டியதே அவசியமில்லாத காலமொன்று வருமென நம்புவதுமாத்திரம் சரியல்லவென்பது என் அபிப்பிராயம். ஏனென்றால், இந்தப் பூமியிலுள்ள மனிதர்கள் எல்லாரும் ஒருகாலத்திலும் குற்றமென்பதைச் சிறிதும் கருத்திலெண்ணாதை ஸத்துவகுண முள்ளவர்க ளாகமாட்டார்களென்பது நிச்சயம். இப்போது சென்ற வருஷங்களில் நடந்த இச்சங்கத்தின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குமளவில், இந்நாட்டில் நடக்கும் ஜீவஹிம்சைகளெல்லாம் அநேகமாய் அறியாமையாலும், ஆலோசனை யில்லாமையாலுமே நடக்கிற காரியங்களாகக் காணப்படுகின்றனவேயன்றி, கொடுந்தன்மையாலும் கொடுமை யிழைக்க வேண்டுமென்னு மெண்ணத்தினாலும் செய்யப்படுகின்றனவாகக் காணப்படவில்லை. இந்துதேசத்தவர்களோ, இயற்கையிலே கொடுமையுடையவர்க ளல்லர். ஆகையால் நம்முடைய இந்தச் சங்கம், தண்டனை செய்வதனால் தன்னுடைய கோரிக்கையை முடிக்கவேண்டுமென்கிற கருத்தைவிட்டு, கல்விப் பயிற்சியாலும் நற்போதனைகளாலும் நல்ல நிதர்சனங்களாலுமே காரியசித்தி பெறவேண்டுமென்று கருதி அவ்வழியைக் கைக்கொண்டிருப்பது முற்றும் சரியானதே. அதனால் இனி காலக்கிரமத்திலே தண்டனையென்பது அநேகமா யொழிந்துபோகுமென்பது நிச்சயம். 1895-ம் வருஷமுதல் சென்ற வருஷங்களைப் பார்க்கிலும் இவ்வருஷத்தில் நடந்த ஜீவஹிம்சைகளுக்காகச் செய்த தண்டனைகளின் தொகை மிகவும் குறைவுபட்டிருப்பதே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமாம்; ஜனங்கள் வாயில்லா ஜந்துக்களை அன்புடனே ஆதரிக்கத் தொடங்கி அப்படிச் செய்வதனாலுண்டாகும் நன்மை இப்படிப்பட்டதென்பதையும் தெரிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்களென்பது இதனால் நன்றாக விளங்குகிறதல்லவா? இது உண்மையான விஷயமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை; ஆகவே, ஜீவஹிம்ஸை செய்த குற்றத்திற்காகச் செய்யும் தண்டனைகள் இனி வரவர விசேஷமாகக் குறைந்துகொண்டு வருமென்று உறுதியாகச் சொல்லலாம்.

மானிடர்களுடைய மனத்தில் ஜீவகாருணியத்தை விசேஷமாக விருத்திசெய்கிற உபாயங்களில் முக்கியமான ஒன்று, ஸகலமான ஜீவஜந்துக்களையும் ஓரிடத்தில் அழைப்பித்து அவற்றின் காட்சியை யாவருக்கும் காட்டுவதேயாம். சலியாத ஊக்கமும் ஜீவகாருணியமு முடையவரான இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி அப்படிப்பட்ட காட்சியொன்றை இரண்டு வருஷங்களுக்கு முன்னே ஸ்தாபிக்கலாயினர். இச்சங்கத்தின் காரியங்களை விசேஷமாக விருத்திசெய்யும் விஷயத்தில் அவர் ஆஸ்தையுடன் படுகிற பிரயாஸைகளை நாம் எவ்வளவு கொண்டாடினாலும் போதாது; இந்த நியாயாதிபதியான போடாம் துரையவர்களைப்போல் இப்படிப்பட்ட அபிமானமுடையவரான அக்கிராசனாதிபதி கிடைப்பது அருமை. (யாவரும் கைகொட்டிக் கொண்டாடினார்கள்.) 'இந்த போடாம் துரையவர்கள் தேக சௌக்கியமில்லாமல் படுத்த படுக்கையாயிருப்பதனால் இன்றையதினம் ஸபைக்கு வ

மாட்டாரோவென்று நான் விசாரமுற்றிருக்கையில், இவர் எப்படியோ கஷ்டப்பட்டுக்கொண்டு இந்தச் சபைக்கு இப்பொழுது வந்தது யாவருக்கும் மிகுந்த ஸந்தோஷத்தை உண்டாக்குகிறது' என்று ம-ா-ா-ஸ்ரீ, ஜம்புலிங்க முதலியார் சொன்ன விஷயத்தில் நானும் கலக்கின்றேன். இவர் கொடியநோயில் அடிபட்டு இன்னும் தேகம் சௌக்கியப்படாமல் மிகவும் மெலிந்திருக்கையிலும் இன்றிராத்திரி இவர் இந்தச் சபைக்கு வந்ததைப்பார்க்கிலும் இந்தச் சபையின் காரியங்களில் இவருக்கு மிகவும் அதிகமான ஆஸ்தையிருக்கிற தென்பதற்கு வேறே திருஷ்டாந்தம் வேண்டுமோ? இவர் முதலில் ஸ்தாபிக்கத் தொடங்கின ஜீவஜந்துக்களின் காட்சியானது, பிரதி வருஷம் நடத்தப்படும் காட்சியாக ஸ்தாபிக்கப்பட்டு உலகத்திற்கு விசேஷமான நன்மையை விளைவிப்பதற்கு ஆதாரமாயிருக்கிறது.

மேலும், பிரஜைகளுக்கு ஜீவகாருணியத்தைக் கல்விப்பயிற்சி மூலமாகப் போதனை செய்விக்கும் பொருட்டு இச்சங்கத்தார் உப சபையார் மூலமாக **ஜந்து வர்த்தமானஸாரம்** என்னும் ஸஞ்சிகைகளை அச்சிட்டுப் பிரசுரஞ்செய்வது, ஜீவ ஹிம்ஸை நிவாரணவிஷயத்தில் இச்சங்கத்தாருக்குள்ள விடாமுயற்சியை விசதமாகக் காட்டுகின்றது. இந்த விஷயத்தில் திவான்பஹதூர். வ. கிருஷ்ணமாசாரியரவர்களும், மஹமது ஸப்தார் உஸ்ஸேன் ஸாஹிப் அவர்களும் உதாரபுத்தியுடன் செய்யும் உபகாரங்களுக்காக இங்கே சபைகூடியிருக்கும் யாவரும் நன்றி பாராட்டக்கடவோம். இச்சங் சங்கத்தின் காரியங்கள் கைகூடும்பொருட்டுத் தங்களா லானவரையில் காலத்தையும் பணத்தையும் செலவு செய்பவர்கள் பலரிருக்க, அவர்களில் சிலரைமாத்திர மெடுத்து மேலாகப் புகழ்வது மற்றவர்களுக்கு ஒருகால் மனஸ்தாபமாயிருக்கலாம். ஆனாலும், ம-ா-ா-ஸ்ரீ லாட் கோவிந்ததாஸின் ஓயாத உதாரகுணத்தை இங்கே யெடுத்துச் சொல்லாமல் விடலாகாது. அவர் முன் செய்தவைபோக, மறுபடியும் சென்ற வருஷம் வண்டி மாடுகளுக்கு இரக்ஷணமாக இச்சென்னைமாநகரில் மற்றொரு மறைவிடம் கட்டிவைத்தார். இச்சென்னைக்கு வந்திருந்த மூன்று மகா ராஜாக்களையும் நாம் இச்சமயத்தில் எடுத்துப் புகழாமல் விடலாகாது. ஜயபுரம் மகாராஜா, திருவாங்கூர் மகாராஜா, பரோதா கைக்வார் ஆகிய மூன்று மகாராஜாக்களும் இச்சங்கத்திற்காக விசேஷமான நன்கொடை கொடுத்து, தங்களைப்போன்ற மற்றவர்களுக்கும் முன் வழிகாட்டினார்கள். இச்சங்கத்தார் செய்துவரும் காரியங்கள் இந்துமதக் கோட்பாடுகளுக்கு முற்றும் பொருத்தமானவைகளாகவே யிருக்கின்றன வென்பதற்கு இவைகளே போதுமான திருஷ்டாந்தங்களா யிருக்கின்றன. அன்றியும், இப்பொழுது இச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி என் கையிற்கொடுத்த ஒரு பத்திரிகையினால், துர்ப்பங்கா மஹாராஜா ஒரு காரியமாக இங்கு வந்திருந்தாரென்றும், அவர் இச்சங்கத்தின் காரியங்களைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு இதற்கு நன்கொடையாக 150 ரூ. அளித்துத் தமது உதாரகுணத்தையும் ஜீவகாருண்யத்தையும் வெளியிட்டாரென்றும் விளங்குகிறது. இத்தருணத்தில் நான் சிறப்பித்துச் சொல்லவேண்டிய விஷயம் மற்றொன்று உண்டு; அதாவது, இச்சங்கத்தில் சேர்ந்திருக்கும் அத்தியக்ஷர்கள் ஐரோப்பியர்களைப்பார்க்கிலும் இந்து தேசத்தவர்களே அதிகப்பட்டிருக்கிறார்க ளென்பதைக் காண எனக்கு அதிகமான ஸந்தோஷ முண்டாகிறது. இத்தேசத்தில் கிறிஸ்தவர்களைப்பார்க்கிலும் இந்துக்களும் மகம்மதியர்களும் தொகையில் அதிகப்பட்டிருக்கிறார்க ளாகையால், இது இப்படி இருப்பது நியாயமே.

இந்த மஹாஸபையில், சாதாரணமாய் அக்கிராஸனாதிபதி செய்யவேண்டிய முறைப்படி, நான் பிரபலமாகப் பிரஸங்கம் செய்வேனென்று நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம்; அப்படி நான் செய்யாமை பற்றி இத்தருணம் உங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நான் இங்கு வந்து இந்த மஹாஸபைக்கு அக்கிராசனாதிபதியாயிருக்கும் பெருமையை வகித்ததே, இந்தச் சங்கத்தின் காரியங்களில் எனக்கு உள்ள உண்மையான அபிமானத்திற்கு நிதர்சனமென்று கருதி நீங்கள் களிப்படைவீர்களென்று பூரணமாக நம்பி நான் திருப்தியடைகின்றேன்" என்றார். அதுகேட்டு யாவரும் கைகொட்டிக் கொண்டாடினார்கள்.

ஜீவகாருணியத்தைப்பற்றிய பல விஷயங்கள்.

ஒரு குழந்தை தன் கூட்டாளியோடாயினும், ஒரு வாயில்லா ஜந்துவோடாயினும், அன்பாகப் பேசிக்கொண்டும், அன்பான காரியங்கள் செய்துகொண்டும் விளையாடுமானால், அந்தக் குழந்தை தன் நற்குணத்தை விருத்தி செய்துகொண்டும் பலப்படுத்திக்கொண்டும் இருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளலாம்; பொல்லாத பேச்சுக்களைப் பேசிக் கொடுமையான செய்கைகளைச் செய்யத் தலைப்படுமானால், யாவரும் இகழத்தக்க துர்க்குணங்களையே விசேஷமாகப் பழக்கிக்கொள்ளுகிறதென்று அறியலாம்.

ஜீவகாருணியத்தை உதாரணங்களால் நன்றாக அப்பியாசஞ் செய்விக்கலாம். ஜீவகாருணியத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டுமென்கிற ஆசை உபாத்தியாயருக்கு இருக்குமானால், கல்விப்பயிற்சியுடனே இதையும் பிள்ளைகளுக்குப் போதிக்கப் பல வழிகளுண்டு. அவற்றுள் முக்கியமான சில வழிகள் இதன் அடியில் குறிக்கிறோம்.

1. வீட்டிற்கு உபயோகமான ஆடு மாடு குதிரை முதலான பிராணிகளைப் பிரீதியுடன் பாதுகாக்க வேண்டுவது அவசியமென்று போதிக்கலாம்.

2. பக்ஷிகளில் அநேகம் பயிர்த்தொழிலாளிகளுக்கு மிகவும் உபயோகமானவைகளாயிருப்பதால், அவைகளையும் இம்சிக்காமல் போஷிக்கவேண்டும்.

3. மனிதர்களுக்கு இருப்பதுபோலவே மிருகங்களுக்கும் சுவாதீனமென்பது உண்டு.

4. வாயில்லாத எளிய ஜந்துக்களை இம்சிப்பது இழிவான காரியம், மிகவும் கொடுமையானது, மேலும் அது கையிலாகாதவன் செய்யும் கொடிய காரியமாம்.

5. வாயில்லாத ஜந்துக்கள் வெகுவாய் தாகத்துக்கு நல்ல தண்ணீர் கிடைக்காமல் தவிப்பதனால், அவைகள் வந்து சுலபமாகக் குடிக்க ஓரிடத்தில் நல்ல தண்ணீர் சொட்டிவைத்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும்.

6. எளிய ஜந்துக்களுக்கு எந்தவிதமான கொடுமைசெய்தாலும், அது அக்கொடுமை செய்பவனை நீசனாக்கிவிடுகிறது—என்று

இவை முதலான சங்கதிகளே, சிறுபிள்ளைகளுக்கு ஜீவகாருணியத்தைப் போதிப்பதற்குரிய நல்ல வழிகளாம்.

அயலார் உன்னை எப்படி நடத்தினால் உனக்குப் பிரியமாயிருக்குமோ, அப்படியே நீ மற்றப் பிராணிகளை நடத்துவாயானால், அப்பொழுதுதான் நீ நியாயத்தைச் செய்பவனாவாய். நீ ஒரு குதிரையை ஓட்டும்படி நேரிட்டாலும், உன்னிடத்தில் ஒரு குதிரையிருந்தாலும் அப்பொழுது, நீயே அந்த குதிரையாயிருந்தால் உன்னைப் பிறர் எவ்விதமாக நடத்த நீ பிரியப்படுவாயென்பதை நினைத்துப்பார்க்கவேண்டும். குதிரை ஒன்றுமாத்திரமேயல்ல, வேறு எந்தப்பிராணி நமது கையில் அகப்பட்டாலும், நாமே அந்தப் பிராணியாயிருந்தால் பிறர் நம்மை எப்படி நடத்த நாம் பிரியப்படுவோமோ, அப்படியே நாம் அவைகளை நடத்தவேண்டும்.

இரண்டு பிள்ளைகள் விளையாடும்போது வலியவன் எளியவனை அடித்தால், அடிப்பவனைப் பொல்லாத பையனென்று யாவரும் கண்டிக்கிறார்களல்லவா? அப்படியே, வாயில்லாத ஜந்துக்கள் எப்போதும் மனிதர்களைப்பார்க்கிலும் எளியவைகளேயாதலால், அவைகளிடம் அன்பு பாராட்டாமல் கொடுமை செய்பவர்கள் கடவுளால் கண்டிக்கப்படுவார்களென்பது நிச்சயம்.

ஜீவகாருணிய போதனை முக்கியமானது.

மனிதர்கள் மேன்மை பெறுவதற்கு முதற்காரணம் ஜீவகாருணியப் பயிற்சியேயாம். உலகத்திலுள்ளவர்கள் எல்லாரும் இதை அப்பியாஸஞ் செய்துகொள்ளத் தலைப்படுவார்களானால், அப்பொழுது இவ்வுலகமெங்கும், தரித்திரம், பொல்லாங்கு செய்தல், யுத்தம் முதலான தீமைகள் வெகுவா யொழிந்துபோம்; அது ஒழிந்தால், காப்புச் சேனைகளையும், சிறைச்சாலைகளையும் பரிபாலிப்பதற்காக வீணாய்ச் செலவாகிற கணக்கு வழக்கில்லாத பொருள் மிகுதியாகிப் பிரஜைகளுடைய நன்மைக்கு உபயோகப்படுத்த உதவியாகிவிடும்.

ஜீவகாருணிய விருத்தியே நாகரீகத் தேர்ச்சியாம்; ஜீவஹிம்ஸை செய்வதே மிருகத்தன்மையாம். இதனுண்மை போகப்போக யாவருக்கும் நன்றாய்த் தெளிவாகும். நெடுநாளைக்கு முன்னேயே ஜீவகாருணியத்தை யாவருக்கும் விருத்தி செய்விக்கத் தொடங்கியிருந்தால், இப்பொழுது சிறைச்சாலைகளில் அடைபட்டுத் துன்பமனுபவித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பிரஜைகள் தம் இளமையிலேயே நல்ல கல்வித்தேர்ச்சி பெற்று நல்வழிப்பட்டு உலகத்திற்கு நன்மையான காரியங்களையே செய்யத் தலைப்பட்டு, இக்காலத்தில் லோகோபகாரமான கனவான்களாயிருப்பார்களல்லவா?

இவ்விஷயத்தில் அனுபவசாலியான ஒரு சிறைச்சாலை விசாரணைத் தலைவர் சொல்வதாவது:—'என்னுடைய இருபத்தைத்து வருஷத்து அனுபவத்தில், சிறைச்சாலைக்கு வரும் குற்றவாளிகளெல்லாரு மேறக்குறைய வாயில்லாத ஜந்துக்களை நேசிக்கக் கற்பிக்கப்படாதவர்களேயாம்; மேலும், அவர்கள் செய்த குற்றத்திற்குக் காரணமென்னவென்று ஆராயுங்கால், உயிர்களிடத்தில் அன்பில்லாமையே முக்கியமான காரணமென்று நன்றாக விளங்குகின்றது' என்கிறார்.

ஒருவன் குழந்தையாயிருக்கும்பொழுது அவனுடைய கூட்டாளிகளோடும் மற்றப் பிராணிகளோடும் பக்ஷமாகப் பேசிப் பிரியமான காரியங்களைச் செய்து வருவானானால், வரவர அவனுக்கு இரக்கம் அன்பு அருள் பெருந்தன்மை முதலான நற்குணங்கள் விசேஷமாக விருத்தியடைந்து உறுதிப்படும்; ஈவிரக்கமும் பச்சாத்தாபமு மில்லாத கொடியனாயிருந்தால், பழிதொழிலும் இழிகுணமுமாகிய மிருகஜாதிக்குரிய துர்க்குணங்களே மேன்மேலும் வளரும்.

குழந்தைப்பருவத்தில் எளிய ஜந்துக்களை இம்ஸிக்கும் பிள்ளைகள் தமக்கே பெருந்தீமை தேடிக் கொள்பவர்களாம். ஆனாலும் இது தெரியாமல், ஏதாவது ஒரு குழந்தை பூனையைப் பிடித்திழுத்தால், 'பூனையைத் தொடாதே, அது உன்னைப் பீறிவிடும்' என்று பயப்படுத்துகிறார்களேதவிர, 'ஐயோ பாவம்! உனக்கு நோவதுபோல் அதற்கு நோவுமே! அதைப் பிடித்திழாதே' என்று ஜீவகாருணியத்தைக் கற்பிப்பவர் ஒருவருமில்லை. எளிய ஜந்துக்களுக்குரிய பாத்தியதை இப்படிப்பட்டதென்பதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்பவரைக் காணோம். பிள்ளைகளின் தரும புத்தி மாறுபட்டுப்

போகிறதென்பதைப் பற்றியும் நினைப்பவரில்லை. ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?

குழந்தையின் கையில் சாட்டை, துப்பாக்கி, கத்தி முதலான கருவிகளைக் கொடுப்பது நல்ல தன்று; அவைகளெல்லாம் கெட்ட பழக்கம். முதலில் அவைகளை விளையாட்டுக்குக் கையாண்டால், பிறகு அதுவே வினையாகவந்து முடிகிறது. பெரியவனானபோது, அவைகளைக்கொண்டு ஜீவன்களை இம்சிப்பது அவனுக்கு ஒரு பெரிய விளையாட்டாகிக் கல்நெஞ்சனாகிப் பற்பல கொடுமைகள் செய்யத் தலைப்படுகிறான். ஆதலால் பிள்ளைகளுக்குச் சிறுபொழுதிலேயே மற்றப் படிப்புகளோடு வீடுகளிலும் பாடசாலைகளிலும் ஜீவகாருணியத்தையே முதன்மையாகக் கற்பிக்கவேண்டும். இதைக் கற்பித்தால் ஜீவஹிம்ஸை ஒழிவது ஒருபுறமிருக்கட்டும்; பிள்ளைகளுடைய நல்லகுணம் விசேஷமாக விருத்தியாகும். பிள்ளைகள் பிற்காலத்திலே நற்குணமுள்ள பெரிய பிரபுக்களாகவேண்டுமென்பதேயன்றோ பாடசாலைப் பயிற்சியின் நோக்கம்? நன்மையாவது, மற்றவர்களிடத்தில் அன்புள்ளவராயிருப்பதேயாம். அன்புடையவர்களுக்கே அதிகமான ஆநந்தமும் மனக்கவலையின்மையு முண்டாகும்.

ஆதலால், இந்த மேலான நற்குணத்தைக் கற்பிக்கும் வழிவகைகளையெல்லாம் பிரசாரமாகும்படி செய்வதற்கு ஜீவகாருணிய போதக சபைகள் அங்கங்கே பற்பல விடங்களிலும் விசேஷமாக ஏற்படவேண்டும். இதுவிஷயத்தில் அங்கங்குள்ள கனவான்கள் மிகுதியாக முயன்று பாடுபடுவார்களானால், நாளளவிலே இவ்வுலகம் உத்தமமான நிலைக்கு வருமென்பதற்குச் சந்தேகமில்லை.

எது நல்ல வழி?

நாம் வேகமாய் ஓடும்பொழுது எதிரே வரும் ஒருவன்மே லிடித்துக்கொண்டால், அந்த அடி நமக்குப் பட்டதுபோல் அவனுக்கும் பட்டிருக்குமென்று நினைப்பவர் எத்தனைபேர் இருப்பார்கள்?

ஒரு குழந்தை ஓடிச் சுவரில் இடித்துக்கொண்டு அந்த நோவு பொறுக்கமாட்டாமல் தாயினிடம் போய் அழுதது; அதைப் பார்த்துத் தாய் சொன்னது என்னவென்றால், 'சுவரா உன் தலையில்பட்டது? பொல்லாத சுவர், அடி அந்தச் சுவரை' என்று சொல்லி அறிவில்லாத அந்தச் சுவரை யடிக்கப் பழக்கினாள். அந்தப் பையன் பின்பு ஒரு நாள் ஓடி ஒருவன்மேல் தாக்கி அடிபட்டுக்கொண்டான். அதற்குப் பிரதி அவனென்ன செய்தான்? முன் தாய் கற்பித்தபடியே எதிரே வந்த பையனை யடித்துப் பகை தீர்த்துக்கொண்டான். நற்குணமுள்ள நல்ல தாயினால் பழக்கப்பட்ட மற்றொரு பையன் விளையாடுகையில் ஒரு பிள்ளைமே லிடித்துக்கொண்டு உடனே தன் தாயாரிடம் போய் 'அம்மா! நான் ஓடும்போது இராமன்மே லிடித்துக்கொண்டேன், என்னைப்போல இராமனுக்கும் நோகுமே! அவனையும் சற்றே அணைத்து முத்தமிட்டுக்கொள்' என்று சொன்னான். இவ்விரண்டிலும் நல்ல வழி யெது? இந்த இரண்டு பிள்ளைகளில் எந்தப் பிள்ளை தன் வாழ்நாளில் ஜீவகாருணியமும் நன்மை தீமைகளை ஆராயும் நற்குணமுமுடையவனாயிருந்து மேன்மைபெறுவான்?

விரைவாகக் கற்றுக்கொள்ளுதல்.

இரண்டு மூன்றுவயதான ஒரு சிறு குழந்தை ஏதோ ஒரு தப்பு செய்ததற்காகத் தாய் அதை அடித்துக் கண்டித்தாள்; அப்படியே அந்தப்பையன் பின்னும் பலதரம் சொன்னபடி கேளாமல் முரட்டுத்தனம் செய்ததற்காகத் தாய் அவனைக் கொடுமையாகத் தண்டிக்கலானாள். அதைக் கண்ட பையன் தானும் தன் தாயை விளையாட்டுக்காகவே அடித்துத் துன்பப்படுத்தலானான். இதனால் அவன் எளியாரை வலியார் அடிப்பது நியாயமென்று தெரிந்துகொண்டு, ஸமயம் நேரிட்டபோது தனக்குக் கீழ்ப்பட்ட பிராணிகளை யெல்லாம் அடிக்கப் பழக்கப்பட்டுக் கடைசியில் பிற்காலத்திலே மிகக் கொடிய பொல்லாதவனானான்.

வண்டிக்காரருக்கு நற்புத்தி கூறல்.

இராகம், கமாஸ். ஆதிதாளம்.

கண்ணிகள்.

அடிக்கடி புத்திசொல்லல் அவசியமா? உனக்கு
அப்பா வண்டிக்காரனே! அவசியமா?

1. அன்புடன் ஜீவன்களை—அணைப்பவனே
அன்புடையோன்
அவைகளை அடிப்பதுடன்—
வதைப்பவனே துன்புடையோன் அடி.

2. மனிதனைப் படைத்தவனே—மற்ற
உயிரும் படைத்தான்
மனவாக்குனக்களித்தும்—
அவைக்கு வாயில்லாமற் செய்தான் அடி.

3. அவைகளை நீ யடித்தால்—அவையாரிடம்
சொல்லியழும்
அடிப்பதை அவனே பார்ப்பான்—
அழுவதையும் அவனே கேட்பான் அடி.

4. அவையுனக் குழைப்பதினால்—அடிமைகள்
ஆய்விடுமோ?
அவைகளை நீயே வதைத்தால்—
ஆண்டவன் உனைவதைப்பான் அடி.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1904.